பதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆடி௴ உ௨; ( 1924 ஜூலை 17 ) வியாழக்கிழமை. { இலக்கம்—ரு.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00.

2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00

3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50

4. சனிதுதி விலை அணா 1

5. தசகாரியம் அணா 5

ச. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

## "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள். (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இவைகள் இவைகளே யாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப் படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென் பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித் துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டிை சபாபருவவுரை | 2 | 25 |
| டிை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| டிை சொல், சேனுவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டிை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டிை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவதசையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், ஸிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜூ ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டிையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டிைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனறியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

## பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினுல் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.

சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

## 4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!

திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாறி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமேடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, மூத்திர மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆடி௴ ௨௨ வியாழக்கிழமை.


## தேய்ந்துவருஞ் சாதி.

தமிழ் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியரை அரசர்களாகக் கொண்டு அவர்கள் பொருட்டு யுத்தஞ் செய்து பகைவரை வென்று தென்னிந்தியாவைப் பரிபாலித்து, அவ்வளவோடமையாது, இலங்கையிற் புகுந்து சிங்களரை மலை நாட்டில் ஒதுங்கச் செய்து இலங்கையின் வடபாகத்திலும் மத்திய இலங்கையிலும் வெற்றிக்கொடியை நாட்டி இராச்சிய பரிபாலனஞ் செய்தவர்களும், அநுராசபுரத்தை இராசதானியாகக் கொண்டு இவ்விலங்கையின் பெரும்பாகத்தை நீதிதிறம்பாது பரிபாலித்த எல்லாள மகாராசன் காலத்தில் அதிக உன்னதநிலையில் விளங்கியவர்களும், கல்வியறிவு நாகரீகம் தேகபலம் இராசத்துவம் சிற்பம் வானசாஸ்திரம் சோதிடம் வைத்தியம் விவசாயம் கைத்தொழில் வாணிகம் என்னும் இவைகளிற் பூரணமடைந்திருந்தவர்களுமாகிய தமிழ்ச்சாதியாரின் தற்கால கேவல நிலைமையை நினைக்கும்போது வயிறெரிகின்றதே; உள்ளம் பதறுகின்றதே; பரிதாபம் பெருகுகின்றதே! இந்தத் தமிழ்ச்சாதியார் இங்ஙனம் தங்கள் பெருமைகளெல்லாம் குன்றிவரப்பெறுவரேல் செல்லரிக்கும் மரம்போலக் காலகதியில் இல்லாதொழிந்துபோவார்களன்றோ!

இத்தமிழ்ச்சாதியார் அரசநீதியில் எவ்வளவு மேம்பாடடைந்திருந்தாரென்பது எல்லாளமகாராசன் சரித்திரத்தைப் படிப்பார்க்கு நன்கு விளங்கும். சிற்பசாஸ்திரத்தில் எத்துணைச் சிறப்புடையராய் விளங்கினரென்பது அநுராசபுரம் பொலநறுவை முதலிய இடங்களில் இப்பொழுது இலமுற்று அழிந்து கிடக்கும் தேவாலயங்களையும் அரமனைகளையும் உபரிகைகளையும் பிறவற்றையும் நோக்குவார்க்கு இனிது புலனாகும். கமத்தொழிலில் எவ்வளவுக்கு முன்னேறியிருந்தார்களென்பது வன்னிப்பகுதிகளிலிருக்கும் குளக்கட்டுகளினாலும் வயலாகவிருந்து காடாக மாறியிருக்கும் பரந்த பூமியினாலும் விளங்கும். வியாபாரத்தில் எவ்வாறு விருத்தியடைந்திருந்தனரென்பது கிரேக்கர்தாமும் இங்குவந்து பல பொருட்களை வாங்கிச் சென்றதாகக் கூறுஞ் சரித்திரங்களால் அறியத்தகும். கைத்தொழிலிற் சிறப்படைந்தமை இங்கு செய்யப்பட்ட வஸ்திரம் மட்பாண்டம் வெண்கலப் பாத்திரங்கள் பித்தளைப்பாத்திரங்கள் யுத்த கருவிகள் ஆபரணங்கள் விக்கிரகங்கள் முதலியவற்றால் விளங்கும். மன்னாரைச் சேர்ந்த மாந்தையிலிருந்த மகுடத்தியாகியென்னும் கம்மியன் பூர்வீக அரசர்கட்கு மகுடஞ் செய்து உதவியமையினாலேயே அப்பெயரைப் பெற்றானென்றும், அவன் பெருந்தலைச் சாத்தனாரின் வேண்டுகோட்கிணங்கி குமணராசனுடைய தலையைப் போல் ஒரு போலித் தலையைச் செய்து அப்புலவருக்கு உதவினனென்றும், புலவர் அத்தலையைப் பெற்றுச் சென்று இளங்குமணனுக்குக் காட்டியபோது அவன் அது தன் தமையனுடைய சிரமென நம்பிப் பிரலாபித்தானென்றும் குமணசரித்திரங் கூறுகின்றது.

பூர்வத்திருந்த தமிழ்மக்கள் இலக்கண இலங்கியங்களில் எத்துணைப் பாண்டித்தியமடைந்திருந்தார்களென்பதற்கு அரசகேசரி இயற்றிய இரகுவமிசம் முதலிய நூல்களே சான்றுபகரும். வைத்தியம் சோதிடம் என்னுந் துறைகளில் இவர்கள் மேலான நிலையையடைந்தனரென்பது ஜகராசசேகரன் பரராஜசேகரன் என்னுமிவர்கள் செய்துள்ள நூல்களாலும் பிறவாற்றானும் அறியத்தகும். பண்டைக்காலத்து விளங்கிய தமிழ்மக்களின் சமயாபிமானமும் கடவுட்பத்தியும் அவர்கள் இங்கு இடங்கள்தோறும் அமைத்த புராதன ஆலயங்களால் அறியத்தகும்.

இவ்வாறன உன்னதநிலையிலிருந்த தமிழ்மக்களின் தற்காலநிலைமையென்ன? இவர்கள் இந்த ஈனஸ்திதியையடைந்ததற்குக் காரணமென்ன? இவற்றைச் சிறிது ஆராய்வாம். மிக்க உன்னத நிலையிலிருந்த யாழ்ப்பாணத் தமிழ்ச்சாதியத்தார் காலவித்தியாசத்தினாற்போலும் தங்கள் அரசை இழக்கலாயினர். இற்றைக்கு 250 வருடங்கட்கு முன்னர் போத்துக்கேயர் இவர்நாட்டைக் கைப்பற்றினர். அவர்கள் 100வருடகாலமாக இத்தமிழரை அடக்கியாண்டனர். போத்துக்கேயர் தமிழரை ஆண்டனரென்று சொல்வதிலும்பார்க்கத் தமிழ்ச் சாதியையும் சைவசமயத்தையும் அழித்து வந்தனரென்று சொல்லுதலே ஏற்புடைத்தாகும். அதன்பின்னர் 30 வருடங்களாக ஒல்லாந்தர் கைப்பட்டுத் தமிழர் பெருங் கேடடைந்தனர். ஆலயங்கள் இடிக்கப்பட்டன. சமய நிஷ்டூரஞ் செய்யப்பட்டது. சாதியாசாரங்களெல்லாம் பலாத்காரமாகத் தவிர்க்கப்பட்டன. எத்தனையோ தமிழர் உள்ளொன்று புறம்பொன்றாக வாழவேண்டியவர்களானார்கள். நூற்றுமுப்பது வருடகாலம் அந்நிய சாதியினாற் கொடுங்கோன்மையோடு ஆளப்பெற்றமையினாலே தமிழர் தங்கள் ஆண்மை பராக்கிரமம் மகத்துவம் என்னுமிவையெல்லாங் குன்றப்பெற்று அடிமைகளாயினர். தமிழ் வேந்தர் காலத்திற் போற்றி வளர்த்துவந்த கல்வி கைத்தொழில் விவசாயம் வாணிகம் சோதிடம் வைத்தியம் சிற்பம் முதலிய அரிய ஞானங்களையெல்லாம் அறவேமறந்து, நடுக்கடலிலே பிரசண்டமாருதத்தில் அகப்பட்டு, பாய்மரம் முதலியன ஒடியப்பெற்று ஓடுஞ் சத்தியற்ற கப்பல்போல் இயங்குகின்ற காலத்திலேயே, ஆங்கிலர் இங்குள்ள தமிழர்களைத் தங்கள் பிரசைகளாக்கினர். ஆங்கிலர் தமிழர்கட்கு மார்க்கசுவாதீனத்தைக் கொடுத்துக் காத்துவருகின்றனரேனும், பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே தமிழர்கள் இழந்த நன்மைகளை மீட்டும் பெறுதற்கான உதவியை (ஆங்கிலர்) தங்கள் பிரசைகளாகிய தமிழ்மக்களுக்குச் செய்யச் சிந்தித்திலர். தங்கள் கல்வியையும் தங்கள் தேசாசாரங்களையும், தங்கள் நாட்டில் ஆக்கப்படும் பொருள்களையும் இங்கே கொண்டுவந்து புகுத்தினர். உணவுப் பொருளுக்கு இந்தியாவை எதிர்பார்க்கச் செய்தனர். செவிலித்தாயர் குழந்தைகளை வளர்ப்பதுபோல், ஆங்கிலர் தமிழர்களை நித்திய குழந்தைகளாக்கி வளர்க்கின்றனர். தாங்கள் ஆளவந்த சாதியரென்பதையும் தமிழர் ஆளப்படப்பிறந்தசாதியரென்பதையும் தம்மனத்திலும் தமிழர் மனத்திலும் நன்கு பதியச் செய்துகொண்டனர். தமிழர் சதாகாலச் சிறைவாசம் விதிக்கப்பெற்றாற்போல, தங்களுக்குக் கனவிலேனும் சுதந்திரமும் மீட்சியும் இல்லையென்று நினைத்து அவ்விரண்டையும் அறவே மறந்துவிட்டனர்.

இவர்கள் இங்ஙனம் தமக்கென ஒரு நிலையில்லாதவராகவும், கொள்கையில்லாதவராகவும், அபிமானம் இல்லாதவராகவும் மாறி, யார் யார் எதையெதைச் சொல்லுகின்றார்களோ அதையதைக்கேட்டும், எதையெதைச் செய்கின்றார்களோ அதையதைச் செய்தும், எவற்றைப் பின்பற்றுகின்றார்களோ அவற்றைத் தாமும் பின்பற்றியும் இடர்ப்படுகின்றார்கள். தாமாக ஒன்றைச் செய்யக் கூசுகின்றார்கள். எங்காயினும் யுத்தம் மூண்டுவிட்டால் அந்தச் சமாசாரத்தைப் புதினப்பத்திரிகையில் வாசிக்கத்தானும் பயப்படுகின்றார்கள். கிளைச்செடி பிடுங்க ஏலப்பாட்டுப் பாடுகின்றார்கள்.

இந்தத் தமிழ்மக்கள் தங்கள் உணவை மாற்றிக்கொண்டார்கள்; உடையை மாற்றிக்கொண்டார்கள்; குலாசாரத்தை விடுத்தார்கள்; "உற்றதொழில் செய்வார்க்கு உறுபஞ்ச மில்லையாம்" என்னும் முதுமொழியை மறந்து தஞ் சொந்தத் தொழிலை விடுத்து வேற்றுத்தொழில் பார்க்க முயன்று ஈற்றில் இரண்டுங் கெட்டு இடர்ப்படலாயினர். மரியாதையான செயலை அவமரியாதையானதென்றும், அவமரியாதையான தொழிலை மரியாதையானதென்றும் மதிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர். சுயாதீனமற்று ஒருவருக்குக்கீழ் உத்தியோகம் பார்ப்பது மரியாதையென்றும், உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லையென்று விதந்து சொல்லப்படும் கமத்தொழில் கௌரவமற்றதென்றும் எண்ணிக்கொண்டார்கள். வீண் இடம்பத்தையும் இன்ப வாழ்க்கையையும் விரும்புகின்றனர். கால்மைல் தூரத்திற்குச் செல்லுகினும் றிக்ஷோ குதிரைவண்டி மோட்டர்ரதம் என்னும் இவைகளிலொன்றிலேறிச் செல்லல்வேண்டுமன்றி நடந்து செல்வதும் மானவீனமென்று நினைக்கின்றனர். கடையில் ஒரு "டசின்" கடதாசியை வாங்கிக் கையிற் கொண்டு வருவது பெருமைக்குறைவென்றும் அதனை ஒரு வேலைக்காரனிடத்திற் கொடுத்துக் கொண்டுவரச் செய்வதே பெருமையென்றுங் கருதுகின்றனர். இவ்வாறன சுகவாழ்க்கை காலகதியிற் சோம்பல் வாழ்க்கையாக மாறிவிடுமன்றோ. பூர்வத்திருந்த ரோமரும் கிரேக்கரும் ஸ்பானியரும் இந்த மடிமையான வாழ்க்கையை அநுசரித்தே தம் பெருமைகளும் வலிமையுங் குன்றிக் காலகதியில் அதோகதியடைந்தார்களென்று சரித்திரங்கள் கூறும். தமிழ்மக்களும் காலகதியில் இவர்களடைந்தகதியையடைவதா?

இனி, தமிழ்மகளிர் அடைந்துள்ள நிலையை நோக்குவோம்: இவர்களும் தங்கள் மூதாட்டியரின் கற்பின் திறமையையும் கீர்த்திப்பிரவாகத்தையும் மறந்து அந்நிய நடை, அந்நிய உடை, அந்நிய பழக்கவழக்க ஒழுக்கம் என்னுமிவைகளைப் பின்பற்றத் தலைப்பட்டனர். இல்லறதருமத்தைத் திறமையோடு நடத்தும் ஆற்றலற்றனர். வீட்டுக்குரிய கருமங்களைப் பார்த்தல் பாகஞ்செய்தல் பிள்ளைவளர்த்தல் தண்ணீர் மொள்ளுதல் முதலிய தொழில்களைச் செய்யக்கூசலாயினர். இவற்றைச் செய்வதற்கு வேலைக்காரரும் ஆயாள்மார் எனப்படுஞ் செவிலித்தாயரும் வேண்டுமென நிற்கின்றனர். படிக்கத்தொடங்கிய பெண்களும் சொந்தப் பாஷையை அலட்சியஞ்செய்து அநாவசியகமான அந்நியபாஷையையே கற்கத் தலைப்பட்டனர். தம் நாயகனுக்கும் பிள்ளைகளுக்கும் தாம் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்னவென்பதைச் சிந்தியாதவர்களாய், தம்மைப் புதுமாதிரியாக ஆடையாபரணங்களால் அலங்கரித்தும் கூட்டங்கட்குச் செல்வதும் தமக்கடாத கருமங்களிற் பிரவேசிப்பதுமே போது போக்காகக்கொள்ளலாயினர். இவர்கள் சுகவாழ்வை விரும்பி வேலைசெய்தலை விடுத்துச் சோம்பேறிகளாகித் தேகபலங் குன்றி, தாம் அணியும் ஆடையாபரணங்களைத் தானுஞ் சுமக்குமாற்றலற்றவராய் மெல்லியலார் என்னுஞ் சொல்லை உண்மைப்படுத்திக் கொண்டமையினால் இவர்கள் உதரத்திற் பிறக்குங் குழந்தைகள் மனுடசென்மங்களென்பதொன்று தவிர ஆண்மை திடகாத்திரம் என்னுமிவைகளற்றவர்களாய் நடைப்பிணம்போற்சஞ்சரிக்கலாயினர். இந்த நொய்ய மானிட சென்மங்களிடத்தில் பூர்வீக தமிழர் மாட்டு விளங்கிய வீரச்செயல்களையும் பேரபிமானத்தையும் மற்றும் பெருந்தன்மைகளையும் நாம் எப்படிக் காத்திருக்கமுடியும்!

இத்தமிழகத்தார் இங்ஙனம் தேய்ந்துவருதற்கு மூலகாரணராயுள்ளார் நம்மைப் பரிபாலிக்கும் அரசரன்றி வேறுயார்? இந்த அரசர் பரிபாலன விஷயம் முழுவதையும் தமிழர் பொறுப்பில் ஒப்புவித்துவிட்டுத் தாங்கள் மேற்பார்வை செய்துகொண்டு அவர்கள் பிழைவிடும்போது அவர்களைத் திருத்தி நடத்தல் வேண்டும். பிழைகள் எல்லாச் சாதியாரிடத்தும் இடையிடையே நிகழ்தல் சகசம். பன்னூற்றுக்கணக்கானவருடங்களாக இராச்சியபரிபாலனஞ் செய்துவரும் ஆங்கிலர் பிழைசெய்யவில்லையா? ஜர்மனியர் பிரான்சியர் முதலானோர் பிழைசெய்யவில்லையா? புராதன சீர்திருத்தமும் மேம்பாடும்படைத்த ஒரு சாதியாரைச் சுயநலங் கருதிப் பரிபாலித்து அச்சாதியார் காலகதியிலே தேய்ந்து அடியற்றுப் போகவிடுதல் நீதியன்று. உன்னதநிலையிலிருந்து காலவித்தியாசத்தினால் இடையே வீழ்ந்து நசிந்துகொண்டு கிடக்கும் தமிழ்ச்சாதியாரைத் தூக்கி மாசுநீக்கிப் பழையபடி நடக்கச் செய்வது அரசர் கடன். அங்ஙனஞ் செய்யும்படி தூண்டுவது சனத் தலைவர் கடனாகும்.

## உலகம் பலவிதம்.

ஒரு மரத்திலே நீண்ட கயிற்றினாற் கட்டப்பட்ட ஒட்டகம் அக்கயிறு அவிழ்ந்துவிட, அதனையும் இழுத்துக்கொண்டு செல்வதை ஒரு எலி கண்டது. கண்ட எலி ஒட்டகம் வழிதெரியாது அலைகின்றதென நினைத்து அக்கயிற்றின் நுனியைத் தன் வாயிற் கௌவிக்கொண்டு முன்னே சென்றது. எலி கயிற்றைக் கௌவிக்கொண்டு தன்னை வழிநடத்திச் செல்வதாக எண்ணி முற் செல்வதையுணர்ந்த ஒட்டகம் தனக்குட் சிரித்துக்கொண்டு பின்னே போகும்போது ஒரு ஆறு குறுக்கிடுதலும் எலி செய்வதின்னதென்றறியாது ஒட்டகத்தைத் திரும்பிப் பார்த்தது. அப்பொழுது ஒட்டகம் சிரித்து "அண்ணே, ஏன் நிற்கின்றாய், இதுவரையும் என்னை வழிநடத்தியதுபோல் இனியும் வழிநடத்திச் செல்லலாமே" என்றது. உடனே, எலி தன் சிறுமையை உள்ளபடி யுணர்ந்து நாணமடைந்து கயிற்றை விடுத்து அப்புறம்சென்றது. இந்த எலியைப்போன்ற மனுஷர்களுஞ் சிலர் இருக்கின்றார்கள். பெருங் கருமங்களில் அழைப்பாரின்றித் தாமாகச் சென்று தலையிட்டுக்கொண்டு, தம்மாலேயே அக்கருமம் நடைபெறுவதாக வீணெண்ணங் கொள்ளுகின்றார்கள். அக்கருமங்கட்கு யாதும் சங்கடமேற்படும்போதே கருமத்தின் பெருமையும் இவர்களின் சிறுமையும் புலப்படும்.

* * *

இக்காலத்தில் இளைஞர் முதியோரிலும் பார்க்கத் தாங்கள் நுண்ணறிய விவேகமுடையவர்களென நினைத்துக்கொள்ளுகிறார்கள். கருமஞ்செய்யும் ஆற்றல் தமக்கே பெரிதுமுடையதென வெண்ணுகின்றனர். இப்படி நினைத்துப் பெரியோரை எள்ளுகின்றனர். இக்காலத்தில் மாத்திரமன்று பூர்வத்திலும் மூத்தோர்சொல்லை அவமதித்துத் தாம் நினைத்தபடி செய்து நாசமுற்றோரின் சரித்திரங்களை அறிந்துள்ளோம். இராவணன் தன் மூதாதையாகிய மாலியவான் சொன்ன புத்தியையும், மாமனாகிய மாரீசன் கூறிய உறுதிமொழியையும் கேளாது சீதையைக் கவர்ந்து கொடுசென்று சிறையிடையுய்த்துக் குலத்தோடு நாசமானான். துரியோதனன் தன் சிறியதந்தையாகிய விதுரன், மூதாதையாகிய வீட்டுமன் என்னும் இவர்களுடைய இதோபதேசத்தை அலட்சியஞ் செய்து பாண்டவரைப் பகைத்து, அவர்க்குக் கேடுசூழ்ந்து ஈற்றிலே தானே சுற்றத்தோடு மடிந்தான்.

* * *

பெண்பாலாராயுள்ளார் இல்லற தருமத்தையும் குறைவற நடத்திக்கொண்டு தேச ஈடேற்றத்தின்பொருட்டுப் பெரிது முழைத்தல் முடியுமோவென்பது ஒரு சந்தேகம். கல்வியிற் சிறந்த ஔவைப்பிராட்டி துறவறத்தை யனுசரித்துள்ளனரென்பர். அவர் இல்லறத்துட்பட்டதாக யாண்டுங் கூறப்படவில்லை. காரைக்காலம்மையார் இல்லறத்தை விடுத்தே துறவறத்தைக் கடைப்பிடிக்கவேண்டியவரானரெனப் பெரியபுராணங் கூறும். இக்காலத்தில் தேச ஈடேற்றத்தின்பொருட்டு உழைத்துவருந் தேவியும் இல்லறத்தை இடையே விடுத்துள்ளனரென அறிகின்றேம். அருந்ததி, சந்திரவதி, அநசூயை, சாவித்திரி, சானகி, தமயந்தி, வாசுகி ஆகிய இவர்கள் இல்லறத்தைக் குறைவற நடாத்திக் கற்புடையவரெனப் பெயர்பெற்றனரேயன்றித் தேச சேவை செய்து கீர்த்தியடைந்தவரல்லர். இவர்கள் செய்துள்ள செயற்கருஞ் செயல்களெல்லாம் இவர்கள் மாட்டு விளங்கிய கற்பின் திண்மை காரணமாக வந்தனவாம். வீட்டிற்குரிய கருமம்பார்த்தல், வரவிற்குத் தக்க செலவு செய்தல், பிள்ளைகளை நல்வழியில் வளர்த்தல், நாயகனைப் பேணுதல், மடம் நாணம் அச்சம் பயிர்ப்பென்னும் நாற்குணங்களுமுடைமை, விருந்தோம்பல், அடக்கம், பொறுமை, இன்சொல், கல்விஞானம் என்னும் குணங்கள்மாதர்களிடத்தில் ஒருங்கு அமைந்திருக்குமேல் அது பொன்மலர் நறுமணத்தோடு இருத்தல்போலாகும். அறிந்து மறியார்போ லிருத்தலே மடமாம். அறியாதிருந்தும் அறிந்தார்போல் நடித்தல் விடமாம்.

* * *

தேசாபிமானம் சமயாபிமானம் சாதியபிமானம் பூண்டு ஒருவர் உலகநன்மையின்பொருட்டுப் பாடுபடும்போது அபிப்பிராய பேதங்களும் இடையூறுகளும் நிகழ்தல் சகஜமே. உண்மையான அபிமானிகள் அவ்வாறன அபிப்பிராயபேதமுடையார்மீது சீற்றங்கொள்ளார்; அவர்க்கு இடர் செய்ய நினையார்; இடையூறுகளைக்கண்டு மனந்தளரார்; வீரம்பேசார்; விரோதம் பாராட்டார். உலகம் பலவிதமென்பதை உணர்ந்து அதற்கியையக் கருமம் புரிவர்.

## சமாசாரம்.

காலநிலை:—குளிரோடு கூடிய கடுங் காற்று வீசுகின்றது. இடையிடையே மெல்லிய மழை தூறுகின்றது.

ஸ்ரீமாந் எஸ். கிருஷ்ணசாமி சர்மா:—இந்திய சனத்தலைவராகிய இவர் சிலநாட்கள் யாழ்ப்பாணத்திற் றங்கி, இடங்கடோறுஞ் சிறந்த உபந்நியாசங்கள் செய்தபின் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை இங்கிருந்து திரிகோணமலைக்குப் பிரயாணமாயினர். இவருடைய வாக்குவல்லபமும் அரசியன்ஞானமும் தேசாபிமானமும் சாலவும் மெச்சற்பாலனவாம்.

ஒரு உத்தியோகத்தரின் பெருந்தன்மை:—"ஐயா, எனக்கு "லீவு" தாருங்கள்; என் ஐந்து வயதுக் குழந்தையை இருந்தாற்போற் காணவில்லை" என்று அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாகப் பதைபதைத்துக் கொண்டு ஒரு தபாற்சேவகன் கொழும்புப் பெரியகந்தோரிலுள்ள தனது மேலுத்தியோகத்தரிடம்வந்து முறையிட்டான். உடனே அவர் விடுதலை கொடுத்ததும் அவன் விரைவாகச் செல்ல முயன்றான். அந்தப்பெருந்தன்மையான உத்தியோகத்தர் அவனை மீளக்கூப்பிட்டு, "இந்தா, இந்தப்பத்து ரூபாவையும் வைத்துக்கொள்; என்னுடைய மோட்டர் ரதம் தலைவாசலில் நிற்கின்றது, சாரதியிடஞ் சொல்லி அதில் ஏறிக்கொண்டு உன்பிள்ளையைத் தேடு. தேடிக் கண்டபின்பே ரதத்துடன் மீண்டுவா" என்று அனுமதிகொடுக்க, அந்தத்தபாற்சேவகன் அப்படியே தேடித் தன்பிள்ளையைக் கண்டுபிடித்துக்கொண்டு மீண்டுவந்து அந்த மேலுத்தியோகத்தருக்கு நன்றிகூறினான். இதுவன்றோ பெருந்தன்மை.

குமரனின் பெருந்தன்மை:—"யாழ்ப்பாணத்தில் சென்ற 35 ஆண்டுகளாய் சைவ சமய வளர்ச்சிக்கு உண்மைத் தொண்டு பூண்டிவரும் 'இந்து சாதனம்' என்ற வாரமிருமுறைப் பத்திரிகைக்குப் புதிய காரியாலயக் கட்டிடம் கிருமிப்பதற்காக அபிமானிகளின் திரவிய சகாயத்தை எதிர்பார்த்திருக்கிறது. சைவசமயப் பற்றுடைய கனதனவான்கள் இச்சங்கைகள் காரியத்தி லீடுபடுவார்களாக" என்று காரைக்குடியிற் பிரசுரமாகும் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய 'குமரன்' கூறுகின்றது.

ஒரு அப்போதிக்கரியின் வைத்திய அனுபவம்:—ஆங்கில வைத்தியத்திலே குறைந்த பிலயிலுள்ளவர் அப்போதிக்கரி யெனப்படுவர். கொழும்பிற்கணித்தாகவுள்ள ஒரு இடத்திலே சென்ற வெள்ளிக்கிழமை ஒரு அப்போதிக்கரி விருந்தருந்தி மீண்டுபோகும்போது பிரசவ வேதனைப்படும் ஒரு கருப்பவதிக்குச் சிகிச்சை செய்யும்படி யழைக்கப்பட்டார். அவர் அந்தக் கருப்பவதிக்குச் சத்திரவைத்தியஞ் செய்யத் தொடங்கினர். உதவிக்கும் இருவரைத் தேடிக்கொண்டார். வெளியே வரமாட்டாத குழந்தையைத் துண்டுதுண்டாக வெட்டியெடுத்தார். தாயின் கருப்பையிலும் ஊறுபடுத்திவிட்டார். தாய் இறந்துவிட்டாள். பெண்ணின் சுற்றத்தார் அவர்மீது வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். இப்படி அப்போதிக்கரிமார் இருந்தாற் பிரசவப் பெண்களெல்லாரும் சவமாய்விடுவரென்பதற்கு என்ன சந்தேகம்!

ஸ்திரி காதகன்:—மாத்தளையைச் சேர்ந்த திபித்துவாவாவென்னும் கிராமத்திலேயுள்ள திக்கிரி என்னும் ஓர் ஸ்திரியைச் சில மாசமாகக் காணவில்லையாம். இவள் கணவனான போடியா வென்பவன் இதையிட்டுப் பொலிசாருக்கு அறிவித்ததுடன் அவள் எங்கெங்கோ இருப்பதாகக் கேள்விப்படுவதாகத் தானே புகார் விளைத்துவந்தான். இப்போது இவர்களின் வீட்டிலிருந்து இரண்டுமைல் தூரத்தே தனிமையான இடத்திலே, செடிகளாற் சூழப்பெற்றதும் அடர்ந்த காட்டின் மத்தியிலுள்ளதுமான ஓர் பெரும் பாறையின் பக்கத்திலே ஓர் மனித எலும்புக் கூடு கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றது. அதன் ஒருபாகம் சிதறுண்டு என்புகள் எங்கும் பரவுண்டு கிடக்கின்றது. அங்குக்கிடந்த காப்பு ஒன்றும், புடைவைத்துண்டுக்களும் திக்கிரியினவே யென்று ருபிக்கப்பட்டு இருக்கின்றன. தனது கணவன் வெறிகொண்டு புரளிவிளைக்காது அவன் வைத்திருந்த கள்ளை யெடுத்து மறைத்து வைத்திருந்தமையாலேயே இக்கொலை நடந்ததாக அடக்கத்திலிருந்த புகார் இப்போது வெளிப்பட்டுவிட்டது. போடியாவின் எழுவயதுள்ள சிறுவன் தனது தாயை தனது தந்தை யொருநாள் அடித்தபின்னர் சாக்குக்குள் போட்டுக் கட்டியதாகச் சாட்சி கூறியிருக்கின்றான். போடியாவும் வேறு சிலரும் கைதுசெய்யப்பட்டு இருக்கின்றனர்.

## விவாகம்.

இந்த ஆனிமீ 28உ வெள்ளிக்கிழமை பகல் 12 மணிவரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் நலலூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகருள் ஒருவராகிய பிரமஸ்ரீ சி. பரமசாமிக் குருக்களுக்கும், இருபாலை பிரமஸ்ரீ இ. சபாபதிக் குருக்களின் புத்திரி ஸ்ரீமதி நாகரத்தின அம்மாளுக்கும் விவாகம் நிகழ்ந்தது. அன்று தொடக்கம் நான்கு நாட்களாக விவாகக் கிரியைகளும் உபசாரக் கொண்டாட்டமும் இனிது நடைபெற்றன. தம்பதிகள் அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் சிவபிரான் திருவருள் முன்னிற்பதாக.

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

முத்தநவீனர்திருவிரட்டைமணிமாலை:—இது கபிலதேவரால் விநாயகக்கடவுள்மீது பாடப்பெற்ற ஒரு திவ்விய பிரபந்தமாம். இதற்கு, திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரப் பிள்ளையின் மாணாக்கரும், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரின் புத்திரருமாகிய சாமிநாததேசிகர் இற்றைக்கு 48 வருடங்கட்கு முன்னர் ஒரு சிறந்த உரை யியற்றியுள்ளனர். அவ்வுரைப்பிரதி இப்பொழுது கிடைப்பதருமையெனக் கண்டு திருமயிலாப்பூர் ஸ்ரீ சே. வெ. ஜம்புலிங்கமவர்கள் மேற்படி யுரையோடு திருவிரட்டைமணிமாலையை யாழ்ப்பாணம் கொக்குவிற் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடுவித்து வெளியிட்டிருக்கின்றனர். உரை பல மேற்கோள்களுடன் நுட்பமாக எழுதப்பட்டுள்ளது. இந்நூல் விநாயகபத்தரால் பாராயணஞ் செய்யத்தக்கதாம். பிரதி யொன்றின் விலை அணா 3. (சதம் 18)

நல்லைச் சண்முக மாலை:—இது நல்லூரிற் கோயில்கொண்டருளிய கலியுகவரதராகிய கந்தசுவாமியின்மேற் பாடப்பட்ட ஒரு பிரபந்தம். 100 விருத்தங்களால் யாக்கப்பட்டது. இதனைப் பாடியவர் வண்ணைநகர் ஸ்ரீ செ. வை. செல்லையா அவர்கள். பாக்கள் சுப்பிரமணியர்மீது பத்திச்சுவையைப் பெருக்குமியல்பின. நூலின் இறுதியில்கூழங்கைத்தம்பிரான் இயற்றிய நல்லைக் கலிவெண்பாவுஞ் சேர்க்கப்பட்டுள்ளது. பிரதியொன்றின் விலை சதம் 50.

எமக்குதவிய பிரதிகளை நன்றியறிதலுடன் ஏற்றும்.

## தமிழாசிரியர் சங்கம்.

இந்த மாதம் 5ந் திகதி சனிக்கிழமை வலிகாமம் மேற்கு, தீவுப்பற்றுப் பகுதிகளின் தமிழாசிரியரின் 3ம் கூட்டம் வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலையில் உபவித்தியாதரிசி ஸ்ரீ எம். தம்பிப்பிள்ளை அவர்கள் சபாநாயகராய் இருக்க நடைபெற்றது. ஆரம்பத்தில் சென்ற கூட்ட நிகழ்ச்சியை ஸ்ரீ எஸ். எ. சின்னையா உபாத்தியாயர் வாசித்தனர். பின் வட்டுக்கோட்டை மேற்கு வித்தியாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ P. வேலுப்பிள்ளை தம்மாணவர்களைக்கொண்டு "சிரமப்பயிற்சி" செய்வித்தனர். பின் மாதகல் சைவப்பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ சே. கணபதிப்பிள்ளை அவர்கள் "எரிமலை" என்பதைப்பற்றிப் படிப்பித்தனர். பாட முடிவில் சபாநாயகரவர்கள் எரிமலையைப்பற்றிச் சிறந்த ஒரு உபந்நியாசஞ் செய்தனர். பின் புங்குடுதீவுச் சைவப்பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ சி. சிவசிதம்பரப்பிள்ளை அவர்களால் 3ந் தரப் பூமிசாஸ்திரத் திரட்டு என்னும் விஷயம் எழுதி வாசிக்கப்பட்டது. அதையிட்டு ஒவ்வோர் விஷயமும் எப்படிப் படிப்பிக்கலாமென்பதைப்பற்றி ஒவ்வோர் உபாத்தியாயர்கள் குறிப்புரை கூறினர். பின்னேரம் சபை கூடும்போது மூளாய்ச்சைவ வித்தியாசாலைஉபாத்தியாயர் ஸ்ரீசரவணமுத்து அவர்களால் சம்பாஷணைப் பாடம் படிப்பிக்கப்பட்டது. அடுத்தமுறை சபை கூடும் போது முன்மாதிரிப்பாடங்கள் படிப்பித்தற்கும் எழுதி வாசித்தற்கும் ஒவ்வோர் உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டனர். கூட்டம் 4½ மணிவரையிற் சமாப்தியாயிற்று.

## பூமியைச் சுற்றிவரும் மற்றொரு சந்திரன்.

மேனாட்டு வான சாஸ்திரிகளைப்போல் நாமும் தூரதிருஷ்டிக்கண்ணாடி, பூதக்கண்ணாடி முதலிய நவீன கருவிகளைக்கொண்டு பரந்த ஆகாயவெளியைப் பரிசோதிக்கக் கற்றுக்கொண்டால், எத்தனையோ அதிசயங்களைக் கண்ணுறலாம். இப்போது இதுகாறும் மேனாட்டு வானசாஸ்திர நிபுணர்களுக்கும் தெரியாத நூதன உபக்கிரகமொன்று பூமியைச் சுற்றிவருவதாகக் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த நூதன உபக்கிரகம் 400 அல்லது 500 அடி குறுக்களவுள்ளதாய் மிகச் சிறிய அயக்கல்லாலாகிய விண்வீழ் கொள்ளியாம். இஃது இப்போது பூமியைச் சுற்றி மூன்றுமணி நேரத்தில் ஓடி வருகிறதாம். என்றால் அதன் கதி விநாடி ஒன்றுக்கு 3½ மயிலாகும். அது பூமியின் மேற்பரப்பினின்றும் சற்றேறக்குறைய 2500 மைல் தூரத்தில் சுற்றுகிறதெனச் சொல்லப்படுகின்றது. இதில் வாயுமண்டலமில்லையாம். இவ்வகையான உபக்கிரகம் அல்லது விண் வீழ்க்கொள்ளியின் வரலாற்றைப்பற்றிச் சிறிது கூறுவாம். பூமியைத் தவிர, புதன், வியாழன், சுக்கிரன், சனியாதிய கிரகங்களுக்கும் பற்பல உபக்கிரகங்களுண்டு. இவை யாவும், முன்னொருகாலத்தில் கிரகங்கள் இப்போதிருப்பதைவிட அதிகச் சூட்டினால் இளகிய தன்மையில் சூரியனை இப்போது சுற்றிவருகிறபடியே சுற்றிக்கொண்டிருந்தபொழுது, சுற்றும் வேகத்தினால் அவைகளிலிருந்து இளகிப் பிரிந்தவையேயாம், அப்படிப் பிரிந்த சிறு பகுதிகள் தங்களைச் சேர்ந்த பெரும் பகுதிகளாகிய கிரகங்களின் ஆகர்ஷண சக்தியினால் அவற்றைச் சுற்றி வருவனவாயின. இவற்றிற் சிற்சில மிகச் சிறிய பகுதிகள் கிரகங்களின் ஆகர்ஷணமண்டலத்துக்கு அப்பால் சென்றதும் ஆதித்தனது பெருத்த ஆகர்ஷணத்துக் குட்பட்டுக் கதிரவனைச் சுற்றி வருவனவாயின. அவ்வாறு சுற்றிவரும் சமயத்து இடையில் ஏதாவது பெரிய கிரகம் அணுகும்படி நேரிட்டால், பிறகு அச்சிறு கிரகங்களின் கதி மாறுபடுவதுமுண்டு. இவ்வாறே இப்போது நமது பூமியைச் சுற்றி ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் சிறு உபக்கிரகம் தனது கதி மாறித் தூமகேதுவைப் போல் சூரியனைச் சமீபிக்கிறதும் மறுபடி எட்டப் போவதுமாய்ச் சென்றுகொண்டிருக்குங்கால் சூரியனைச்சுற்றிவரும் பூமியை அது அணுகும படி நேரிட பூமியின் ஆகர்ஷணத்தால் பிடிக்கப்பட்டுத் தனது பழைய கதி மாறிப் பூமியைச் சுற்றிஓட நேரிட்டது என்று சொல்லப்படுகிறது. இந்த உபக்கிரகத்தைப்பற்றிய மற்ற விபரங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அமெரிக்க ஐரோப்பிய வானசாஸ்திரிகள் இதனைக் கவனமாய் நோக்கி அதைப்பற்றி யறியவேண்டியவற்றைச் சீக்கிரம் கண்டுபிடித்து விடுவார்களென்பதி லையமில்லை. —'குமரன்'

## கடிதம்.

### வைக்கம் தீண்டாமைக் கலகம்.

வைக்கம் தீண்டாமைக் கலகத்தைப்பற்றி எழுதிய கடிதத்திற்கு விடைவருமாறு:

திருவாங்கூர் இராஜ்ஜியம் வைக்கம் என்னும் க்ஷேத்திரத்தில், பிராமண அக்கிராரவழியாய் பஞ்சமர் (தீண்டாதவர்கள்) போகக்கூடாதென்று ஒருமாதமாய்க் கூட்டங்கூடிப் பேசிக்கொண்டு வருகிறார்கள். மஹாத்மா காந்தியவர்களும் இதற்காக மிகவும் பாடுபடுகின்றார். ஸ்ரீருங்கேரி சங்கராசாரிய சுவாமிகளும் தீண்டாமையை மாத்திரம் விலக்கவேண்டியதுதான் என்றும், அவர்களுடன் பந்திபோஜனம் பெண் கொடுக்கல் வாங்கல் விலக்கவேண்டியதுதான் என்றும் தெரிவிப்பதாய்ப் பத்திரிகை மூலமாய் அறியலானேன். ஆனால் இவ்விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றேனென்று வேலந்தாவை என்னும் ஊரிலிருந்து ஸ்ரீ.K. நடராஜன் என்பவர் எப்பைக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதம் கோலாலம்பூர் F. M. S. ல் 6-6 24 வந்து சேர்ந்தது. அதற்குப் பதிலாக எழுதிய விஷயம் யாதெனில், அடியேனால் எழுதிய வெளியாம்பதிப்பு "ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்" 226ம் பக்கம், பரமசிவன் சண்டாள வேஷம் தரித்துக்காசிப் பட்டண வழியாய் வரும்போது, ஸ்ரீ ஆதிசங்கராசாரியர் அவரைப் பார்த்து ஹே! சண்டாளா விலகிப்போ என்று சொல்லினர். அப்போது, சண்டாள வேஷத்தைத் தரித்துவந்த பரமசிவன், அவரது அஞ்ஞானத்தைப் போக்கி ஆத்மசொருபத்தை அறிவித்துச் சென்றபின், ஸ்ரீசங்கராசாரியரது ஜாதி அபிமானம் நீங்கி, பிரமபிபீலிகாதி என்றால், கண்களுக்குக் காணப்படாத சிறிய புழு முதல் பிரமதேவன்வரையில் எந்த சூத்திரம் (நூல்) ஆடிக்கொண்டிருக்கின்றதோ அந்த சூத்திரமே "நான்". கண்களுக்குக் காணப்படும் வஸ்துக்கள் (சரீரம்) நானல்ல; இப்படிப்பட்ட திடஞானம் எவனுக்குண்டோ அப்படிப்பட்டவன் சண்டாளனாயிருந்தாலும் அல்லது பிராமணனாயிருந்தாலும் அவனே என் குருவென்று ஸ்ரீசங்கராசாரியர் சொன்னதை வாசித்துக் காட்டி அவர்களின் சந்தேகம் தெளிவிக்கும்படி மேற்படி நடராஜன் என்பவருக்குக் கடித மூலமாய் அறிவித்தோம்; ஆதிசங்கராசாரியர் ஈஸ்வராம்சமாயிருந்தபோதிலும் அவரையும் அஞ்ஞானம் மூடிக்கொண்டிருந்தபடியால், பரமசிவன் அதைக் கண்டு உலகத்தைச் சீர்திருத்த வந்த ஸ்ரீ சங்கராசாரியரது அஞ்ஞானத்தைப் போக்கடிக்கச் சண்டாளவேஷந் தரித்துவந்தார். இப்போதிருக்கும் பிராமணர்கள்மீது குற்றஞ்சொல்ல வேண்டாம்; ஆதி சங்கராசாரியர் பிராமணகுலத்திற் பிறந்தபடியால் அவருக்கு ஜாதிவித்தியாசம் உண்டாயிற்று; அந்த வாசனையே இப்போதுள்ள பிராமணர்களையும் தொடர்ந்துகொண்டுவருகின்றன: இந்த ஜாதிபேதம் இவர்களைவிட்டு எப்பொழுதும் ஒழியமாட்டா; சண்டாள வேஷந் தரித்து வந்த பரமசிவன் ஸ்ரீ சங்கரரைக் கேட்ட கேள்வி ஜீவப்பிரம்மைக்கிய வேதாந்தரகசியத்தில் தெரிவித்திருப்பதை எல்லோருந் தெரிந்துகொள்ள இதனடியிற் தெரிவிக்கின்றோம்:

இந்த உலகத்தில் பரமதயையுடையவனும் இருக்கின்ற பரமசிவன், ஜல ஜந்துக்களுக்கு சமுத்திரமே காரணமாயிருப்பதுபோல், தக்கமே சம்சாரமென்னும் சமுத்திரத்துக்குக் காரணமாயிருந்து; சதாகாலமும் அதில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஜீவகோடிகளை உத்தரிப்பதற்காக, சண்டாளவேஷந்தரித்து காசிப்பட்டின வழியாய் வரும்போது, ஸ்ரீ சங்கராசாரியர் அவரைக் கண்டு "ஹே! சண்டாளா! விலகிப்போ" என்று சொல்லினர்; அப்போது, சண்டாளவேஷத்தைத் தரித்திருக்கும் பரமசிவன் சொல்லுகின்றார்:

"ஹே! சந்நியாசிகளுக்கெல்லாம் சிரேஷ்டனாயிருக்கப்பட்டவனே! நான் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லக்கடவாய்; அன்ன விகாரமாகிய உன் சரீரத்தை விட்டு, அன்னவிகாரமாகிய என் சரீரத்தை விலகும்படி சொல்லுகின்றாயா? அல்லது, சைதன்ய சொருபமான உன் பிரத்தியகாத்மாவிலிருந்து, பிரத்தியகாத்ம சொருபமான என் சரீரத்திலிருக்கும் பிரத்தியகாத்மாவை விலகிப்போவென்று சொல்லுகின்றாயா?

உன் சரீரம், எப்படி அன்னமய கோசத்தினால் உண்டாயிற்றோ, அதுபோல் என் சரீரமும் அன்னமயகோசத்தினால் உண்டாயிற்று. ஆதலால் இரண்டு சரீரங்களும் ஒன்றாயிருக்க உன் சரீரம்மாத்திரம் சுசியானதென்றும், என் சரீரம் அசுசியானதென்றும் எப்படிச் சொல்லலாம். என் சரீரம் அசுசியென்றால், உன் சரீரமும் அசுசியானதே. ஆதலால், சரீரத்தைப் பார்த்து விலகியிரு என்று சொல்வது யுக்தமானதன்று. நம்மிருவருடைய சரீரமும் அசுத்தமேயென்று சொல்வதற்கு வேதமே பிரமாணமாயிருக்கின்றது. அதாவது,

பிரபஞ்சமெல்லாம் மாயாசொருபமாயிருக்கின்றது. ஆதலால், ஒரே விதமான ரசத்தினாலுண்டாகிய சரீரங்களைக் குறித்து நீ அபிமானம் வைக்கலாகாது. சைதன்ய சொருபனான பிரத்தியகாத்மசொருபம் உன் சரீரத்திலும், என் சரீரத்திலும், கண்களுக்குக்காணப்படாத சிறிய புழு சரீரத்திலும், பிரமதேவன் சரீரத்திலும் ஒரேவிதமாயிருக்கின்றது; இது விஷயத்திலும் நீ சொல்லலாகாது. இதற்குச் சுருதி பிரமாணம்.

ஆத்மாஒருவனே, சுயம்பிரகாசனும் எல்லாப் பூதங்களிலும் அதிகோப்யமாய் ஸாக்ஷிபூதனும் பிரத்தியகாத்மாவாய் இருக்கின்றான்.

துக்கமயமாகிய அகங்காரங்களுக்கெல்லாம் வேறாயிருந்து பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப்பிரம்மத்துடன் சேர்ந்திருப்பவனுக்கு, அலைகளில்லாதசமுத்திரம்போல் சங்கல்பவிகல்பம் (நினைப்புமறப்பு) இல்லாதவனுக்கு, இவன் பிராமணனென்றும் இவன் சண்டாளனென்றும் பேதபுத்தி எங்கிருந்து உண்டாயிற்று. கங்காநதியிலும் சண்டாளவீதியிலும் இருக்கும் ஜலத்தில் பிரதிபிம்பித்திருக்கும் சூர்யனுக்கு எப்படி குணபேதமில்லையோ அப்படியே பிரத்தியகாத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் பேதமில்லை; தங்க கலசத்திலும் மண் பாண்டத்திலும் நிறைந்திருக்கும் ஆகாசத்திற்கு குணபேதங்கள் எப்படியில்லையோ அப்படியே ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் குணபேதங்களில்லை; ஆத்மவஸ்துவில் பேதபுத்தியுடன் எவன் பார்க்கின்றானோ அவன், ஜனன மரணரூபமாயிருக்கும் சம்சாரத்திலிருந்து விடுபடமாட்டான். குடத்திலிருக்கும் ஆகாசத்தைக் கொண்டுபோவதில்லை; குடத்தை மாத்திரம் கொண்டுபோகின்றார்கள். அதுபோல், ஜீவனும் ஆகாசம் போல் எங்கும் நிறைந்திருக்கப்பட்டது. அது, எங்கும் அகண்டானந்தரூபமாய் ஞானத்தினால் பிரகாசித்து சர்வகாலத்திலும் ஆனந்தத்துடன் கலந்து ஒன்றாயிருக்கும் பரப்பிரம்மம். அப்படிப்பட்ட பரப்பிரமத்திற்கு பேதபுத்தியுண்டென்று நீ எப்படிச் சொல்லலாமென்று சண்டாள வேஷதாரியாகிய பரமசிவன் சொல்லினர்.

இவ்விதமாய்ச் சண்டாள வேஷத்தைத் தரித்துவந்த பரமசிவனது வார்த்தையை ஸ்ரீ சங்கராசாரியர் கேட்டவுடன், ஜாதிபேதமில்லாதவராய் சில முமுக்ஷுக்களைப் பார்த்துச் சொல்லுகிறார்;

ஜாக்கிரதை சொப்பன சுஷுப்திகளில் எந்த ஞானம் சுயம்பிரகாசமாய்ப் பிரகாசிக்கின்றதோ, எந்தஞானம் ஜகத்திற்குச் சாக்ஷியாயிருக்கின்றதோ, பிரம பிபீலிகாதி சரீரங்களில் எந்தச் சூத்திரம் (நூல்) ஆடிக்கொண்டிருக்கின்றதோ, அந்தச்சூத்திரமே 'நான்' காணப்படும் சரீரம் நானல்ல; இப்படிப்பட்ட திடஞானம் எவனுக்குண்டோ அப்படிப்பட்டவன் சண்டாளனாயிருந்தாலும் அல்லது, பிராமணனாயிருந்தாலும் அவனே 'குரு' வென்று ஸ்ரீ சங்கராச்சாரியர் சொல்லுகினறார். ஆதலால், பஞ்சமர்கள் (தீண்டாதவர்கள்) யாதொரு தடையுமின்றி வைக்கம் அக்கிராரவழியாய்ப் போகலாமென்பதே அடியேனுடைய கருத்து; தீண்டாமை மாத்திரம் விலக்கவேண்டியதுதான் என்றும், அவர்களுடன் பந்திபோஜனம் பெண் கொடுக்கல் வாங்கல் விலக்கவேண்டியதுதானென்றும் ஸ்ரீ ருங்கேரி சுவாமிகள் சொல்லிய வாக்கியம் சத்தியம்; ஆனால், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, யெல்லா வுயிருந் தொழும்" என்னுந் திருக்குறள் வாக்கியரீதியாயும், ஜீவஹிம்ஸை செய்யாதவனும், ஸ்நானம், மடி, ஆசாரம், சிவ விஷ்ணுக்களின் பூஜையில் மிகவுஞ் சிறந்தவனாயிருப்பவன் சண்டாளனாயிருந்தாலும் அவனுடன் பந்திபோஜனம் செய்யலாம்; இக்குணங்களுடைய சண்டாளனுடன் போஜனம் செய்யலாமேயொழிய, அவனைச்சார்ந்த பந்துக்களுக்கு இவ்வித ஆசாரங்கள் இல்லாததனால் அவர்களுடன் பந்தி போஜனம் செய்யலாகாது:

யார் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்பதை மறு பத்திரிகையில் தெரிவிக்கிறோம்:

இப்படிக்கு,
பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்
கடப்பை, க்யாம்பு,
செந்தல் இந்து சங்கம், கோலம்பூர், F.M.S.

## அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் பருத்தித்துறை புலோலி மேற்கு கார்த்திகேசர் வேலுப்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | மீ | உ | ரூ. | சத. | நகை விபரம் |
|---|---|---|---|---|---|
| 1921ஆ | | | | | |
| 3130 | 11 | 5 | 78 | 50 | பவுண் கொலுசுக் காப்பு சோடி 1 |
| 1922ஆ | | | | | |
| 3566 | 8 | 30 | 50 | ,, | பவுண் தாலிக்கொடி 1 |
| 3619 | 10 | 2 | 30 | ,, | சற்தோடு சோடி 1 |
| 3687 | 10 | 30 | 10 | ,, | பவுண் காப்பு சோடி 1 |
| 3789 | 12 | 14 | 12 | ,, | பொன் கிச்சி 1 |
| 1923ஆ | | | | | |
| 3843 | 1 | 9 | 8 | ,, | பொன் சவுக்கமணி 28 |
| 3865 | 1 | 20 | 25 | ,, | பவுண் பூராணட்டியல் 1ம் சுரை இல்லை பத. 1பழு. |
| 3935 | 3 | 3 | 50 | ,, | பவுண் பூராணட்டியல் 1 |
| 4053 | 5 | 18 | 10 | ,, | பொன் காதுநூல்தட்டு 75ம் மணி 3ம் வெள்ளி அரைஞாண்கொடி 1 |
| 4069 | 6 | 2 | 47 | ,, | பவுண் குவளைக்கடுக்கன் சோடி 1 ச. இ. சிமிக்கி வாளிசோடி 1ம் பொன் சவுக்கமணி 32ம் பின் கோக்கியும் |

விற்பனவு:—ரத்தாக்ஷி௵ ஆடிமீ 13-ந் திகதிக்குச் சரியான 1924ம்ஆ ஆடிமீ 28-உ திங்கட்கிழமை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகேங்களாக வைஇடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இ. சுப்பிரமணிய உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்,
(Mis. 510). புலோலி-மேற்கு.

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
மூபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

## திறமானமங்களூர் ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அண்கோ அல்வாரிஸ் அண்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டகோச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிகரும் வண் கிழக்கு ரு. ம. வீ. அ. சி. முத்தவயிருப்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

| நம். | மீ | உ | ரு. | ஊர் பெயர் | நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| | 1923ஆ | | | | |
| 1998 | ஜெனவரி | 15 | 45 | மானிப்பாய் வீரகத்தி காசி, | பொன் டிம்மியுடன் மேற்படி கம்பிப்பூரானட்டியல் 1 |
| 2040 | ஷை | 31 | 55 | புங்குடுதீவு மேற்கு சின்னத்தம்பி அப்பாபிள்ளை, | திருகில்லாத பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 2091 | பிபர்வரி | 16 | 35 | தாவடி காத்திகேஸ் வேலுப்பிள்ளை, | பொன்தாயித்துடன் மேற்படி குண்டுச் சங்கிலி 1 |
| 2175 | மே | 2 | 25 | கந்தர்மடம் கந்தர் சின்னத்தம்பி, | பொன் சாதா மோதிரம் 2 |
| 2213 | ஜூன் | 8 | 15 | வேலணை கிழக்கு ஆறுமுகம் குழந்தைவேலு, | பொன் பின்கோர்க்கி 1ம் நாட்டுக் கடுக்கன் சோடி 1 |

விற்பனவு:—இரத்தாக்ஷி ஞூ ஆடிமீ 4-ந்திகதிக்குச் சரியான 1924ஆ ஜூலாய்மீ 19உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறரீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்திற் கூறி விற்கப்படும்.

ஆரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.
(Mis. 509)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதத்கெளனத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

## சூலை, குஷ்டம், ரணம், பத்து முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

# குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புக்கள், கிரந்திகள், பத்துக்கள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுந்திரம், கண்டமாலை, சூலைநீர், முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூ. 40. 40 வேளை மருந்து ரூ. 20. |20 வேளை மருந்து ரூ. 10. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

நற்சாட்சி:—திரேகமெல்லாமிருந்த மேகப் பத்துகள் இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிட்டன. கை, கால் விரல்களி லிருந்த ஆறுத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முக வசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிபிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

☞ வீரியவிர்த்திக்கு நிகரற்ற

## மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. யி. மு. இப்ராம்ஸா 3-I-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மதகோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
**C. மலையப்பசாமி பிள்ளை,**
நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

(Q. (A) 46)

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணம் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | | 10—0—0 |
| 20 | ,, 40 | ,, | ,, | ,, | ,, | | 5—0—0 |
| 10 | ,, 20 | ,, | ,, | ,, | ,, | | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

**Hakeem K. Mohamed Yoosoof,**
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA.)

(H. 27.)

உங்கள் குழந்தைகளுக்கு

# லக்ரோஜின்

என்னும்

## இயற்கையான பாலுணவை ஊட்டி நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே
மூலைப்பாலுக்குச் சமானமானது.
இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும் சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.

# லக்ரோஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.
இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும் உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன். .H .O

நெஸ்லின் & அங்கிலோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரோஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ........................................

விலாசம்:— ........................................

(Q. 49.)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.